**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC – 148/2023**

**வழக்கு சாட்சி :PW7(LW7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயஸ்ரீ | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | காவல் ஆய்வாளர், திருச்சி விமான நிலைய காவல் நிலையம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 31th day of October 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது காவல் ஆய்வாளராக திருச்சி விமான நிலைய காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2022 ம் தேதி அன்னவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலினைப் பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புதுககோட்டை மாவ்டடம், இலுப்பூர் தாலுகா, ஒடுக்கூர் அஞ்சல், ஆவாரங்குடிப்பட்டியை சேர்ந்த அழகப்பன், த/பெ. குஞ்சான் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்: 24/2022 இதச பிரிவுகள் 294 (b), 323, 324 மற்றும் 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் . **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** .

2. பின்னர் அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு 14.30 மணிக்கு சென்று சம்பவ இடமான ஆவாரங்குடிப்பட்டி வாதியின் வயல் அருகே சாட்சிகள் ராமையா மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பட்டியல் சாட்சிகளான அடக்காயி, குஞ்சான். பழனிச்சாமி, ராமையா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.02.2022 ம் தேதி 12.00 மணிக்கு எதிரிகள் கருப்பையா மற்றும குமார் ஆகியோரை ஆவாரங்குடிப்பட்டி பஸ் ஸ்டாப் அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையில் விடுவித்தேன்.

4. பின்னர் வழக்கில் காயம்பட்ட அ.சா. 1 அழகப்பன் மற்றும் அ.சா. 2 அடக்காயி ஆகீயோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.மணிமொழி புதுக்கோட்டை அவர்களை விசாரணை செய்து அவரிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்துஅ.சா. ஆ.2 மற்றும், அ.சா.ஆ. 3 காயச்சான்றிதழ்கள் பெற்றேன் .

5. பிறகு எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 28.03.2022 ம் தேதி 294 (b), 323, 506(1) IPC ன் கீழ் மீது மேற்சொன்ன பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எ.த.கு.வி</u>

1. இந்த வழக்கு சம்மந்தாக அ.சா. 1 மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த விவரம் குறித்து எந்த தேதியில் ,எத்தனை மணிக்கு தகவல் வரப்பட்டது என்றால் 03.02.2022 ம் தேதி வரப்பட்டது, நேரம் சரியாக தெரியவில்லை. இந்த வழக்கு சம்மந்தாக அ.சா. 1 ன்னிடம் அரசு மருத்துவமனை சென்று எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 04.02.2022 ம் தேதி காலை புகார் வாக்குமூலம் பெறப்பட்டு மதியம் 13.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. வழகக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும இடத்திற்கும் , காவல் நிலையத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 17 கி.மீ இருக்கும். இரு சக்கர வாகனம் அல்லது நான்கு சக்கர வாகனத்தில் சென்றால் எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால் அரைமணி நேரத்தில் செல்லலாம்.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் மதியம் 01.30 என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் கடைகளோ, வீடுகளோ, கோவில், பள்ளி எதுவும் கிடையாது என்றால் சரிதான்.பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட ராமையா , பழனிச்சாமி ஆகியோர்கள் அ.சா. 1 ன் உறவினர் என்றால் அது பற்றி தெரியாது. நான் அரசு மருத்துவமனைக்கு அ.சா. 1 ன் புகார் வாக்குமூலம் வாங்க சென்ற போது இந்த வழக்கில் கண்ட சாட்சிகள் எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் இருந்தனர். இரண்டு நபர்களிடமும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரிதான். வழக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும இடத்தில வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டு , சாட்சிகளை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் பைப் லைன் போடுவதற்காக குழிகள் பறிக்கப்பட்டிருந்ததா அல்லது பைப் லைன் சேதமடைந்து இருந்ததா என்று வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழகக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் கரடுமுரடான , அதிக கற்கள் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக அ.சா. 1 கொடுத்த புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட அரசுத்தரப்பு சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 11 நாள் காலதாமதமாக

நீதிமன்றத்தில் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும், இந்த காலதாமதம் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான்.